**Judicial Form No**.53
(See Rule 42)
**DEPOSITION OF WITNESSES**
(**Chapter XXII**, **Cr**.**P**.**C**.)
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, SULUR.**

Calendars
Miscellaneous
Preliminary Register
Sessions

Case No. CC 75 of 2022

Depositions of PW - 6 witness for ________ { Prosecution / Defence / Court }

Name : நடராஜ்

Father's Name : கந்தசாமி

Village :

Taluk :

Calling :

Age :

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 22nd **day of September** 2025.

**(எதிரிகள் ஆஜர் இல்லை. எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜராகி பாகுபாச பிரிவு 355 ன் படி மனு தாக்கல் செய்துள்ளார். போலீசார் சாட்சிகளை நீதிமன்றத்தில் ஆஜர் படுத்தினார்கள்)**

**அரசு தரப்பில் முதல் விசாரணை**

நான் சூலூர் கண்ணம்பாளையத்தில் குடியிருந்து கொண்டு இரும்பு குடோன் வைத்து சொந்தமாக வியாபாரம் செய்து வருகிறேன். PW2 செந்தில் குமார் என்பவரை எனக்கு தெரியு. 05.01.2020 ம் தேதி செந்தில்குமார் என்பவரை அடித்து விட்டதாக கேள்விப்பட்டேன். யார் அடித்தார்கள் என்று எனக்கு தெரியாது. இரண்டு நாட்கள் கழித்து காவல் நிலையம் சென்றேன். போலீசார் என்னிடம் கையொப்பம் செய்யுமாறு சொன்னார்கள். நானும் கையொப்பம் செய்தேன். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**(அரசு தரப்பில் சாட்சியை பிறழ் சாட்சியாக குறுக்கு விசாரணை மேற்கொள்ள நீதிமன்ற அனுமதி கோரப்பட்டு சாட்சியை பிறழ் சாட்சியாக அறிவிக்கப்பட்டு நீதிமன்ற அனுமதியுடன் அரசு தரப்பில் குறுக்கு விசாரணை)**

கடந்த 05.01.2020 ம் தேதி நான் சொந்த வேலையாக பாப்பம்பட்டி சென்று மாலை 06.30 மணியளவில் கண்ணம்பாளையம் வருவதற்காக பைக்கில் நடுப்பாளையம் பிரிவு பஸ் ஸ்டாண்ட் அருகில் வந்து கொண்டிருந்த பொழுது அப்பொழுது டிஎன் 49 ஏ ஏ 59 59 என்ற பதிவெண் கொண்ட வெள்ளை நிற ஸ்கார்பியோ காரில் வந்த தாமரைக்கண்ணன் என்பவர் செந்தில்குமார் என்பவரின் காருக்கு அருகில் காரை நிறுத்தினார் என்றும், தாமரைக்கண்ணனுடன் அவரது காரில் வந்த விக்கி என்கிற விக்னேஷ், கார்த்திக், குமரன் மற்றும் குமார் ஆகியோர் இறங்கி செந்தில்குமார் அருகில் சென்று விக்கி என்கிற விக்னேஷ் செந்தில்குமாரின் கழுத்தில் கத்தியை வைத்து மிரட்டினார் என்றும், செந்தில்குமார் ஏதோ சொல்ல ஐந்து பேரும் சேர்ந்து செந்தில்குமார் இழுத்து அவர்கள் வந்த காரில் வலுக்கட்டாயமாக ஏற்றிக்கொண்டு வேகமாக சென்று விட்டார்கள் என்றும், அப்பொழுது அங்கிருந்த பேக்கரியில் வெளியே வந்த எனது நண்பரும் முருகானந்தம் செந்தில்குமாரை கடத்திச் செல்லும் நபர்களைப் பற்றி கூறி முருகானந்தத்தை தனது பைக்கில் ஏற்றிக்கொண்டு தாமரைக்கண்ணன் ஓட்டிச்சென்ற காரை துரத்தி சென்று அவர்கள் சென்ற ரோடுகளில் தேடினோம் என்றும், முருகானந்தத்திடம் விசாரித்த பொழுது கடந்த 05.01.2020 ஆம் தேதி காலை 9 மணி அளவில் செந்தில்குமார் அவரது காரை பாரதிபுரம் ஸ்டாண்டில் நிறுத்திய பொழுது இருவருக்குள் தகராறு ஏற்பட்டது என்றும், அதை மனதில் வைத்துக்கொண்டு தற்பொழுது அவரை கடத்திச் சென்றுள்ளதாகவும் தெரிந்து கொண்டேன் என்றும், பின்னர் எதிரிகள் அனைவரும் சேர்ந்து செந்தில் குமார் அவர்களை பஞ்சாயத்து அலுவலகத்திற்கு முன்னால் வந்து தள்ளிவிட்டு சென்றுவிட்டதாகவும் எங்களது நண்பர்கள் சதீஷ்குமார் பாலு அருகில் இருந்ததாகவும் அவருக்கு உடல் முழுவதும் லேசான காயங்கள் ஏற்பட்டதற்காக கோவை அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்காக செல்வதாக கூறினார் என்றும், பின்னர் நானும் முருகானந்தம் இருவரும் சேர்ந்து மருத்துவமனை சென்றோம் என்றும் செந்தில் குமார் அவர்களுக்கு உதடு, இடது கன்னத்தில் லேசான ரத்தக்காயமும், கண் புருவம், முதுகு, கால் முட்டி ஆகிய இடங்களில் மொக்கை காயங்களும் ஏற்பட்டு இருந்தது என்றும், சம்பவம் குறித்து அவர் தங்களிடம் சொன்னார் என்றும், போலீசார் விசாரித்த பொழுது கூறிவிட்டு தற்பொழுது சம்பவம் குறித்து தனக்கு தெரியாது என்றும், செந்தில் குமார் செய்ததாக வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல.

<u>**மறுவிசாரணை**</u> இல்லை

ARUNKUMAR T

Digitally signed by ARUNKUMAR T
Date: 2025.09.22 19:56:01 +0530

**Signature of Witness**

**நீதித்துறை நடுவர்**

**சூலூர்**